# இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் பெரிய மாற்றம்

## பூந்தமல்லி – பவர்ஹவுஸ் பாதையில் பணிகளை முதலில் தொடங்க திட்டம்

**சென்னை, டிச.7:** இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் ஒரு பெரியமாற்றத்தைசெய்யசென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் முடிவு செய்துள்ளது. அதாவது, மாதவரம்- சோழிங்கநல்லூர் இடையே தொடங்க இருந்த மெட்ரோ ரயில் திட்டம் தற்போது மாற்றப்பட்டு, அதற்கு பதிலாக பூந்தமல்லியில் இருந்து பவர் ஹவுஸ் (கோடம்பாக்கம்) வரை உயர்த்தப்பட்ட பாதையில் திட்டப்பணிகளை முதலில் தொடங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலமாக, மக்கள் அடர்த்தி பகுதிகளான போரூர், ஆலப்பாக்கம், வளசரவாக்கம் மற்றும் சாலிகிராமம் ஆகிய பகுதிகளில் பொது போக்குவரத்து வசதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**மெட்ரோ ரயில் திட்டம்:** சென்னையில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் விதமாக, 45 கி.மீ. தொலைவில் முதல்கட்ட மெட்ரோ ரயில் திட்டப்பணிகள் நிறைவடைந்து, விமான நிலையம்-வண்ணாரப்பேட்டை வரையும் சென்ட்ரல்-பரங்கிமலை வரையும் மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

**இரண்டாம் கட்ட திட்டம்:** இதற்கிடையில், 118.9 கி.மீ. தொலைவிலான இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் அறிவிக்கப்பட்டது. மாதவரம்-சிப்காட் (45.8 கி.மீ.), மாதவரம்-சோழிங்கநல்லூர் (47.0), கலங்கரை விளக்கம்-பூந்தமல்லி (26.1 கி.மீ.) ஆகிய 3 வழித்தடங்களில் மெட்ரோ ரயில் திட்டத்தைச் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டது. இதன்படி, இந்தத் திட்டத்துக்கு ரூ.61,843 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

மாதவரம்-சோழிங்கநல்லூர் பாதையை முடித்து மெட்ரோ ரயில் சேவையை முதலில் தொடங்க மெட்ரோ ரயில் நிறுவனம் முடிவு செய்திருந்தது. மேலும், இது முன்னுரிமை வழித்தடம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், மாதவரம்-சோழிங்கநல்லூர் இடையே தொடங்க இருந்த மெட்ரோ ரயில் திட்டம் தற்போது மாற்றப்பட்டு, அதற்கு பதிலாக பூந்தமல்லியில் இருந்து பவர் ஹவுஸ் (கோடம்பாக்கம்) வரை உயர்த்தப்பட்ட பாதையில் திட்டப்பணிகளை தொடங்க




மெட்ரோ ரயில் நிறுவனம் முடிவு செய்துள்ளது. இதன் மூலமாக, மக்கள் அடர்த்தி பகுதிகளான போரூர், ஆலப்பாக்கம், வளசரவாக்கம் மற்றும் சாலிகிராமம் ஆகிய பகுதிகளில் போதிய பொது போக்குவரத்து வசதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**பூந்தமல்லி -பவர்ஹவுஸ்:** இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தின் மூன்று வழித்தடங்களில்கலங்கரைவிளக்கம்-பூந்தமல்லி ஓர் வழித்தடம் ஆகும். இதன் ஒரு பகுதியாக பூந்தமல்லி-பவர்ஹவுஸ் பாதை வருகிறது. இது உயர்த்தப்பட்ட பாதையாக அமையவுள்ளது. இந்தப் பாதையில் பவர் ஹவுஸ், சாலிகிராமம், ஆவிச்சி பள்ளி, ஆழ்வார் திருநகர், வளசரவாக்கம், காரம்பாக்கம், ஆலப்பாக்கம் சந்திப்பு, போரூர் சந்திப்பு, சென்னை புறவழிச்சாலை குறுக்கு, ராமச்சந்திர மருத்துவமனை, ஐயப்பந்தாங்கல் பேருந்து டிப்போ, காட்டுப்பாக்கம், குமனன்சாவடி, கரையான்சாவடி, முல்லைதோட்டம், பூந்தமல்லி பேருந்து முனையம், பூந்தமல்லி புறவழிச்சாலை ஆகிய நிலையங்கள் வரவுள்ளன.

**கட்டுமானப் பணிகள்:** இது குறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியது: இந்த உயர்த்தப்பட்ட பாதையின் கட்டுமான காலம் சுமார் 36 மாதம் ஆகும். இரண்டு டெண்டர்கள் விடப்பட்டுள்ளன. போரூரில் இருந்து பூந்தமல்லி வரையும், போரூரில் இருந்து பவர்ஹவுஸ் இரண்டு பிரிவுகளாக, கட்டுமானப் பணிகள் பிரிக்கப்படும். இந்த இரண்டு பாதைகளிலும் கட்டுமானப் பணிக்காக, மூன்று ஒப்பந்ததாரர்கள் தேர்வுசெய்யப்பட்டுள்ளனர்.

உயர்த்தப்பட்ட பாதையில் கட்டுமானப் பணிகள் எளிதானது. எனவே, இந்தப் பாதை முதலில் செயல்பாட்டுக்கு வரக்கூடும். முன்னுரிமை வழித்தடத்துக்காக, டெண்டர் விட்டுள்ளோம். இதற்கான செயல்முறைகள் நடைபெற்று வருகின்றன.

முன்னுரிமை வழித்தடத்தில் பெரும்பகுதி சுரங்கப்பாதையில் வருவதால், செயல்பாட்டுக்கு வர சில காலம் எடுக்கும். முழு திட்டத்தையும் 6 ஆண்டுக்குள் முடிக்க திட்டமிட்டுள்ளோம். திட்டப்பணிக்கான ஒப்பந்தங்கள், அடுத்த ஆண்டு தொடக்கத்தில் வழங்கப்படும்.

பூந்தமல்லி -பவர்ஹவுஸ் வரை கட்டுமானப் பணிகள் 3 ஆண்டுகளில் முடிய வாய்ப்பு உள்ளது. ஆய்வுக்கு தேவையான தொழில்நுட்பங்களை நிறுவுவதற்கு சில காலம் தேவைப்படும்.

விரிவான வடிவமைப்பு விசயங்கள் தயாராக இருப்பதால், ஒப்பந்தக்காரர் காலக்கெடுவை கடைப்பிடித்தால், மூன்று ஆண்டுகளில் கட்டுமானத்தை தாமதமின்றி முடிக்க முடியும் என்றனர்.